[1970 செப்டம்பர் 5

சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசல்

*248 வினு—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

சென்னை நகரில் வளர்ந்துவரும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க புதிய திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சென்னை மாநகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காக பின்வரும் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன :—

(1) மவுண்ட்ரோடு ஜெமினி சதுக்கத்தில் ஒரு பாலம் (flyover) ஒன்று கட்டுதல்.

(2) பூவிருந்தவல்லி நெடுஞ்சாலையின் குறுக்கே சென்ட்ரல் ரயில் நிலையத்திற்கு அருகில் பாலம் ஒன்று கட்டுதல்.

(3) திருவல்லிக்கேணி, பைக்கிராப்ட்ஸ் சாலைக்கு எதிரிலுள்ள தெற்கு கடற்கரை சாலையில் சுரங்கப்பாதை ஒன்று கட்டுதல்.

(4) கடற்கரை ரயில் நிலையத்திற்கு எதிரில் வடக்கு கடற்கரைச் சாலையில் ஒரு சுரங்கப் பாதை கட்டுதல்.

*249 வினு—திரு. என். கிட்டப்பா :

திரு. கரு. சீமைச்சாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் ஜெமினி ஸ்டுடியோவுக்கு எதிரில் அமைக்கப்படவிருக்கும் மேம்பாலம் எப்போது வேலை துவக்கப்படவிருக்கிறது?

(இ) அதற்காகும் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :(அ) இப்பணிக்கென ஒப்பந்தப்புள்ளி கேட்கப்பட்டதன் மேல் பல்வேறு நிறுவனங்களிடமிருந்து வந்துள்ள ஒப்பந்தப் புள்ளிகள் முடிவு செய்யப்பட்டு வருகின்றன. ஒப்பந்தப் புள்ளிகள் முடிவு செய்யப்பட்ட பின்னர் இப்பணி நிறைவேற்றுவதற்காக விரைவில் மேற்கொள்ளப்படும்.

(இ) இப்பணியின் மதிப்பீட்டுச் செலவு ரூபாய் 45 லட்சமாகும்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, சென்னை நகரத்திலுள்ள போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க, முக்கியமான சில இடங்களில் ஒரு வழிப்பாதையாக மாற்றி அமைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சில இடங்களில் ஒரு வழிப்பாதையை போலீஸ் துறையினர் செய்து வருகிறார்கள்.

Dr. H.V. HANDE : Sir, in view of the fact that some experts have already mentioned that within another decade, that is by 1980 the traffic problem in the City will become a serious problem

which will even elude a proper solution. So. will this Government come forward to give some concrete suggestions as to how exactly they can disperse traffic by having some satellite towns around the City and by dispersing a few of the major offices of the State and the Central Governments to the outskirts of the City?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இது ஒரு முக்கியமான கேள்வி. அதைப்பற்றி "மெட்ராபொலிடன் ஸ்டடி டீம்" பரிசீலித்து வருகிறது. அவர்களுடைய பரிசீலனை முடிந்த பிறகு ஒரு முடிவு எடுக்கலாம்.

திரு. எஸ். இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, இந்தத் திட்டங்களுக்கு இந்திய அரசிடமிருந்து ஏதாவது உதவி கேட்டிருக்கிறோமா? கேட்டிருந்தால், அது எவ்வளவு தொகை? அது என்ன நிலையில் இருக்கிறது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஏற்கனவே குறிப்பிட்டது போல், போக்குவரத்து நெரிசலைக் குறைக்க திட்டங்கள் மாநில அரசால் ஏற்றுக்கொள்ளப்படும். மத்திய சர்க்காரிடமிருந்து உதவி கோரியதாகத் தகவல் இல்லை.

திரு. கே. விநாயகம்: தலைவர் அவர்களே, சென்னை நகரிலே உள்ள போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காக மாஸ்டர் பிளான் ஒன்று தயாரிக்கப்பட்டு திட்டம் போடப்பட்டதே அது என்ன ஆனது? சென்னைக்குத் தெற்கே இருந்து வரக்கூடிய பாதையையும், சென்னைக்கு வடக்கே இருந்து வரக்கூடிய பாதையையும் நகருக்கு வெளியே இணைப்பதற்கான ஒரு திட்டம் போட வேண்டுமென்று இருந்ததே அது என்ன ஆனது, அந்தப் பாதை போட்டால் போக்குவரத்து நெரிசல் தவிர்க்கப்படும் என்று சொல்லப்படுகிறதே அந்தத் திட்டத்தை அரசாங்கம் எப்போது எடுத்துக்கொள்ளும்? அந்தத் திட்டத்திற்கான செலவை நமது அரசாங்கம் செய்ய வேண்டுமா? அல்லது மத்திய அரசாங்கத்திலேயிருந்து எவ்வளவு தருகிறது? மெட்ரோபாலிடன் ஸ்கீம் வந்தால்தான் போக்குவரத்து நெரிசல் தீரும் என்று அரசு கருதுகிறதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர் அவர்கள் ஒரே சமயத்தில் எவ்வளவு கேள்விகளைக் கேட்பது? இப்படி நிறைய கேள்விகளை கேட்டால் ஒன்றுக்குமே பதில் வராது. ஏனெனில் எல்லாவற்றையும் நினைவில் வைத்துக்கொள்ள முடியாது.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, இது பற்றி அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது. நம்முடைய மாநிலத்திற்கும் மத்திய அரசாங்கத்திலிருந்து மெட்ரோபாலிடன் ஸ்டடி டீம் ஒரு மாதத்திற்கு முன்னால் வந்து போயிருந்தது. அந்தக் குழுவினிடத்தில் நாம் இதைப்பற்றி வற்புறுத்தியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துக்களின் அடிப்படையில் மத்திய அரசாங்கத்தினுடைய செலவிலேயே இந்த மேம்பாட்டுத் திட்டம் செய்யப்பட வேண்டும் என்று அறிவித்திருக்கிறோம்.

திரு. கொளத்தூர் கோதண்டம்: தலைவர் அவர்களே, சென்னை நகரிலே போக்குவரத்து நெரிசலைத் தவிர்ப்பதற்காக ஒருவழிப் பாதையை உடனடியாக அமல்படுத்த வேண்டும். உதாரணமாக பிராட்வே போன்ற பாதைகளை ஒருவழிப் பாதையாக ஆக்குவதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, எல்லாவற்றையும் ஒருவழிப் பாதையாக ஆக்குவது என்பது முடியாது. சாத்தியமான இடங்களில் ஒருவழிப் பாதையை ஏற்படுத்த முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, சென்னை நகரம் நாளுக்குநாள் வளர்ந்துகொண்டு வருகிறது. பம்பாய், கல்கத்தா, டில்லி போன்ற நகரங்களிலுள்ள போக்குவரத்து வசதிகள் போலல் லாமல், சென்னை நகரம் டவுன் பஸ் போக்குவரத்தையே நம்பிக் கொண்டிருக்கிறது. இன்னும் நான்கைந்து வருடங்களுக்குப் பிறகு போக்குவரத்து மிகவும் கஷ்டமாக இருக்கும். இன்று கூவம் நதித் திட்டம் சீரானால் போக்குவரத்தைத் துரிதப்படுத்த முடியும். மேலும் மின்சார ரயில்களை அதிகமாக விடுவதன் மூலமும், சென்னை நகரைச் சுற்றி சுற்று ரயில் விடுவதன் மூலமும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க அரசாங்கம் முயற்சி செய்யுமா? அப்படி ஏற்படும் திட்டத்திற்கான பெரும்பகுதிச் செலவை மத்திய அரசாங் கத்திடமிருந்து பெறுவதற்கு இந்த அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, சர்க்குலர் ரயில் அமைக்க வேண்டுமென்ற திட்டம் அரசாங்கத்தின் பரிசிலனையில் இருக்கிறது. போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க அரசாங்கம் தக்க நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளும்.

### சிதம்பரம் அருகேயுள்ள அத்திப்பட்டு சாலை

*250 வினா—திரு. எஸ். சிவசுப்ரமணியன்: மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிதம்பரம் தாலூகா, சிதம்பரம்–சீர்காழி ரோட்டில் பழைய கொள்ளிடம் ஓரம் போகும் அத்திப்பட்டு ரோட்டில் (உப்பனாற்றங்கரையில்) சுமார் $2\frac{1}{2}$ மைல் தூரம் கப்பி அடிக்கப் படாமல் சீர்க்கேடாகக் கிடப்பது விஷயமாக பொதுமக்களிட மிருந்து ஏதேனும் மனு அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடம் இல்லை.

### *Bus guides and fare tables*

*251 Q.—Thiru K. VINAYAKAM: Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the Government has decided to instruct the State Transport Department to issue bus guides and fare tables and proper notice boards for the information of travelling public?